**செய்தி வெளியீடு எண்: 500** **நாள்: 27.07.2018**

# செய்தி வெளியீடு

## மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் சிறப்புப் பள்ளிகள் / இல்லங்களுக்கு உணவூட்டு மானியம்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012–2013ஆம் ஆண்டில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் மேல்பாக்கம் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லத்தில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்கு, தரமான மற்றும் சத்தான உணவினை வழங்குவதற்கு ஏதுவாக நாள் ஒன்றுக்கு 15 ரூபாய் என்ற வீதத்தில் வழங்கப்பட்டு வந்த உணவூட்டு மானியத்தை மாதமொன்றுக்கு 650 ரூபாய் என உயர்த்தி ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, மாற்றுத் திறனாளிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகிறது. தமிழ்நாட்டில் செயல்படும் 74 அரசு இல்லங்கள் மற்றும் 228 சிறப்புப் பள்ளிகளில் உள்ள 12,003 மாற்றுத் திறனாளிகள் ஆண்டுக்கு 8 கோடியே 22 லட்ச ரூபாய் மதிப்பில் மாதம் ஒன்றுக்கு 650 ரூபாய் உணவூட்டு மானியம் பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

இந்நிலையில், சிறப்புப் பள்ளிகள் மற்றும் இல்லங்களில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு மேலும் சத்தான உணவை வழங்கும் பொருட்டு, தற்போது வழங்கப்பட்டு வரும் 650 ரூபாய் மாத உணவூட்டு மானியத்தை, 900 ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இவ்வாறு உணவூட்டுச் செலவினம் உயர்த்தி வழங்கப்படுவதால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு மொத்தம் 11 கோடியே 39 லட்சம் ரூபாய் செலவாகும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**